# ஐக்கிய இராச்சியத்திற்கு வெளியுறவுத்துறை செயலாளரின் உத்தியோகபூர்வ பயணம் (மே 16-17, 2024)

மே 17, 2024

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. வினய் குவாத்ரா அவர்கள் 2024 மே 16 முதல் 17 வரை வெளியுறவுத்துறை ஆலோசனைகளின் 16 வது சுற்றுக்காக, வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் (FCDO) நிரந்தர துணை செயலாளர் சர் பிலிப் பார்ட்டனுடன் ஐக்கிய இராச்சியத்திற்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டார். இந்த பயணத்தின் போது, MOS வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. லார்ட் தாரிக் அஹ்மத், MOS பாதுகாப்பு கொள்முதல் அமைச்சர் திரு. ஜேம்ஸ் கார்ட்லிட்ஜ், தேசிய பாதுகாப்பு செயலாளர்(NSA) திரு. சர் டிம் பரோ, இங்கிலாந்து உள்துறை அமைச்சகத்தின் நிரந்தர செயலாளர் திரு. மேத்யூ ரைக்ராஃப்ட், இங்கிலாந்தின் தலைமை வர்த்தக பேச்சுவார்த்தையாளர் திரு. க்ராஃபோர்ட் ஃபால்கோனர் மற்றும் இங்கிலாந்து பிரதமரின் மூத்த வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் பேராசிரியர் ஜான் பியூ ஆகியோருடன் அவர் சந்திப்புகளை நடத்தினார்.

இதில் இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்து இருதரப்பும் விவாதித்தனர். வெளியுறவுத்துறை செயலாளரும், நிரந்தர துணை செயலாளரும் 2030 சாலை வரைபடத்தை விரிவாக ஆய்வு செய்தனர். அனைத்து தூண்களிலும் நல்ல முன்னேற்றத்தை வரவேற்று, லட்சியத்தை உயர்த்துவதில் தங்கள் ஆர்வத்தை அவர்கள் வலியுறுத்தினர். மேலும் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், மக்களிடையேயான உறவுகள் மற்றும் இயக்கம், எரிசக்தி மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவும், ஐக்கிய இராச்சியமும் ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையைப் பகிர்ந்து கொள்கின்றன. இது அனைத்து துறைகளிலும் வழக்கமான உயர்மட்ட அரசியல் பரிமாற்றங்கள் மற்றும் இருதரப்பு நிறுவன வழிமுறைகளின் கூட்டங்கள் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த சுற்று வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை 2025 ஆம் ஆண்டில் புதுதில்லியில் நடத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**புது தில்லி**
**மே 17, 2024**